## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

நிறைவேற்றுகை மனு எண். 32/2011

நிறைவேற்றுகை விண்ணப்ப எண் 58/2018

இன்று 2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ம் நாள் இன்று இந்த ம.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆர்.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரபு |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் |
| வயது | : | 46 |

முதல் விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன்.

குறுக்கு விசாரணை

யாராருக்கு இடையில் எந்த சொத்து சம்பந்தமாக என்ன வழக்கு நடைபெறுகிறது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் வாடகைதாரராக 5 மாதத்திற்கு முன்பு வந்ததாக சொல்கிறீர்கள் அதற்கான வாடகை ஒப்பந்தம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழியாக தான் வாடகைக்கு வந்தேன். நீங்கள் வாடகை செலுத்தி வருவதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் வாடகைக்கு இருந்து வரும் 5 மாதத்திற்கு முன்பு என்ன நடந்தது என்ற விவரங்கள் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். முகம்மது உசேன் என்பவர் வாடகைக்கு இருந்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் நான் அவரிடம் பழம் வாங்கி தள்ளுவண்டியில் விற்று வந்தேன். நீங்கள் வாடகைக்கு இருங்நது வருவதாக சொத்தின் சர்வே எண் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் வழக்கு நடைபெறும் சொத்தில் வாடகைதாரராக இருந்து வருவதாக பெரியசாமி என்பவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

R KARTHIKEYAN
Digitally signed by R KARTHIKEYAN
Date: 2023.03.04 16:00:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.